# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 10 | நாடகமும் அரங்கியலும் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி I

*** மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01. நாடகம் ஒன்றின் பிரதான நோக்கம் யாது?
    1. படித்துச்சுவைப்பது
    2. மேடையில் சம்பவங்களை சித்தரிப்பது
    3. அறிவு புகட்டுவது
    4. பார்ப்போரிடையே ரச உணர்வை ஏற்படுத்துவது

02. நாடகத்தைக் குறிக்கும் சிங்கள மொழிச் சொல்
    1. நடனம் 2. நாட்டிய 3. நாடகம 4. குதி

03. உடக்குப்பாஸ் எனும் சடங்கு ஆடப்படும் பிரதேசம்
    1. தலைமன்னார் 2. முருங்கன் 3. பேசாலை 4. மடு

04. வில்லுப்பாட்டும் கதாப்பிரசங்கமும்
    1. கட்புலக்கலை 2. செவிப்புலக்கலை
    3. ஆக்கும்கலை 4. ஆற்றுகைக்கலை

05. நாடக எழுத்துருவொன்றை நாடகமாக மாற்றுபவர்
    1. முகாமையாளர் 2. நெறியாளர் 3. நடிகர் 4. தயாரிப்பாளர்

06. குரற்பயிற்சியின் முகாமைத்துவம் அல்லாதது
    1. குரலின் வீச்சையும், ஒலியையும் மாற்றலாம்
    2. ஒலியை கட்டுப்படுத்தலாம்
    3. உளத்தை ஒருநிலைப்படுத்தலாம்
    4. புறத்தெறிகையுடன் பேசலாம்

07. பின்வருவனவற்றுள் கதவடித்துப்பாடும் நிகழ்வு இடம்பெறும் சடங்கு
    1. குளிர்த்தி 2. வேட்டைத்திருவிழா
    3. சூரன்போர் 4. பாஸ்கா

08. பின்வருவனவற்றுள் பௌத்த சிங்களச் சடங்காக அமைவது.
    1. பாண்டவர்வனவாசம் 2. சூரன்போர்
    3. சொக்கரி 4. ரட்டயக்கும

09. வேடஉடையும் ஒப்பனையும் அடங்குவது.
    1. உடல் வழிச்சித்தரிப்பு
    2. குரல் வழிச்சித்தரிப்பு
    3. உணர்ச்சிவழிச் சித்தரிப்பு
    4. காண்பிய வழிச் சித்தரிப்பு



kalvi.lk

10. உடற்பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டு.

1. குருட்டு ஆட்டோ 2. கோழி கோட்டான்

3. காகம் உயிர் பெறுதல் 4. சங்குவெத்திலை சருகு வெத்திலை

11. பத்தினித் தெய்வத்துடன் தொடர்புடைய சிங்களச் சடங்கு.

1. கோலம் 2. சொக்கறி 3 தொவில் 4. நாடகம்

12. ஊமம் நிகழ்த்தும் நடிகர் ஒருவர் பெற்றுக்கொள்ள வேண்டியது.

1. குரற்பயிற்சி 2. வாசிப்புப்பயிற்சி

3. உடற்தளர்வுப்பயிற்சி 4. பேச்சுப்பயிற்சி

13. கருத்தூன்றல் பயிற்சிக்கு அதிக அழுத்தம் கொடுக்கப் பெறும் அரங்க விளையாட்டு.

1. நண்டு, இறால், மீன் 2 ஆடும், வீடும்

3. நாரைநாராய் 4. கரடியும் கிராமமக்களும்

14. வீரபத்திரர் ஆட்டம் என்னும் சடங்கு நிலை ஆட்டம் நிகழ்த்தப்படும் பிரதேசம்.

1. மன்னார் 2. மட்டக்களப்பு 3. நீர்கொழும்பு 4 யாழ்ப்பாணம்

15. நாடகம் என்னும் கலைவடிவம் தோன்றியது.

1. நாட்டியம் 2. சடங்கு 3. பொம்மலாட்டம் 4. கூத்து

16. பாத்திரம் ஒன்றை நடிக்கும் போது நடிகர் செய்யும் பிரதான பணி

1. நடனம் ஆடுதல் 2. பாட்டுப்பாடுதல்

3. ஆள்மயமாதல் 4. வசனம் பேசுதல்

17. ஈஸ்டர் தினத்திற்காக நடத்தப் பெறும் சடங்கு நாடகத்தில் இடம் பெறும் கதை.

1. யேசுவின் மரிப்பும் உயிர்ப்பும் 2. மூவிராசாக்கள் கதை

3. கிறிஸ்துவின் பிறப்பு 4. ஞானசௌந்தரி கதை

18. இலங்கையில் பறைமேளக் கூத்து பிரதானமாக ஆடப்பெறும் இடம்

1. மலையகம் 2. மன்னார் 3. யாழ்ப்பாணம் 4. மட்டக்களப்பு

19. பரத முனிவர் கூறும் ரசங்கள்

1. 7 2. 8 3. 9 4. 10

20. நாடக அளிக்கை ஒன்றிற்கு மிக அவசியமானது

1. வேட உடை 2. ஒளிஅமைப்பு 3. நடிகர் 4. காட்சியமைப்பு

21. போலச் செய்தல் கலைகளுக்கு அடிப்படை எனக் கூறியவர்.

1. அரிஸ்ரோட்டில் 2. தொம்சன் 2. பேனாட்சா 4 சேக்பியர்

22. பின்வருவனவற்றுள் அரூப மூலகமாகக் கொள்ளக் கூடியது.

1. காட்சி 2. எழுத்துரு 2. நடிகன் 4. ஒப்பனை

23. எழுத்துருவிற்கு உயிர் கொடுத்து அரங்கில் உலாவவிடுபவர்.

1. தயாரிப்பாளர் 2. நடிகர் 3. நெறியாளர் 4. நாடக ஆசிரியர்

24. நாடகம் பற்றி அறிய உதவும் பண்டைய நூல்

1. நாட்டியசாஸ்திரம் 2. ஆற்றுகை 3. கூத்தரங்கம் 4. கட்டியம்

25. நீண்ட வசனங்களைப் பேசுவதற்காக காற்றைச் சேமித்து வைக்க வேண்டிய உறுப்பு.

1. தொண்டை 2.அடிவயிறு 3. நாசி 4. உச்சந்தலை



kalvi.lk

26. பார்ப்போரின் பதிற்குறிகள் உடனடியாக தாக்கம் செலுத்தும் கலைகளில் ஒன்று.

1. சித்திரம் 2. இலக்கியம் 3. கட்டடம் 4. நாடகம்

27. நாடகம் சிற்பம் இரண்டிற்கும் பொதுவான பண்பாக அமைவது.

1. குறித்த இடம் காணப்படும் 2. கணப்பிரசன்னமானது

3. தாக்க மறுதாக்கக்கலை 4 கட்புல செவிப்புலக்கலை

28. உலக நாடகதினம் எப்போது கொண்டாடப்படுகிறது

2. மார்ச் 27 2. ஏப்ரல் 27 3. யூன் 5 4. ஒக்டோபர் 1

29. நாடகத்தை நால்வழிச் சித்தரிப்புக்களின் ஊடாக பார்ப்போரிடத்தே கொண்டு செல்பவர்.

1. நெறியாளர் 2. நடிகர் 3. பார்வையாளர் 4. தயாரிப்பாளர்

30. ஆற்றுவோரும் பார்ப்போரும் சங்கமிக்கும் இடம்.

1. கோயில் 2 வைத்தியசாலை 3. மைதானம் 4. அரங்கு

31. பறைகளை வாசிப்போரின் தலைவர் எவ்வாறு அழைக்கப்படுபவர்.

1. கட்டியக்காரன் 2. மூப்பன் 3. கோணங்கி 4. பபூன்

32. சொக்கரி ஆடப்படும் அரங்கவெளி.

1. கரலிய 2. தானயம்பொல 3. களத்துமேடு 4. வட்டக்களரி

33. ஆடலை முதன்மைப்படுத்திய நாடக வடிவம்.

1. இசைநாடகம் 2. பலே 3. சமூகநாடகம் 4. வரலாற்று நாடகம்

34. உலகின் முதலாவது நடிகன் என்ற பெருமைக்குரியவர்.

1. தெஸ்பிஸ் 2. மிலான்பாங் 3. யூலியசீசர் 4. றிச்சட்சொ்னர்

35. வகுப்பறையில் அமர்ந்தவாறு விளையாடக்கூடிய அரங்க விளையாட்டு.

1. ஆடும் வீடும் 2. கோழிகோட்டான்

3. சின்னப்பானை பெரிய பானை 4. குருட்டாட்டோ

36. பாத்திரச் சித்தரிப்பின் போது அகநிலை சித்தரிப்புக்கு உதவுவது.

1. காட்சி விதானிப்பு 2. ஒளி 3. வேட உடை விதானிப்பு 4. குரல்

37. படத்தில் காட்டப்பெற்றுள்ள சடங்கு.

1. வேட்டைத்திருவிழா
2. சூரன்போர்
3. பாஸ்கா
4. இரட்டயக்கும



38. படத்தில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவி குறிப்பது.

1. தப்பு
2. பறை
3. மேளம்
4. மிருதங்கம்





kalvi.lk

39. படத்தில் காட்டப்பட்ட படத்துடன் தொடர்புடைய சடங்கு



1. வேட்டைத்திருவிழா
2. பாஸ்கா
3. சூரன்போர்
4. குளிர்த்தி

40. படத்தில் காட்டப்பட்டுள்ள படம் குறிப்பது.




1. வரலாற்று நாடகம்
2. சிறுவர்நாடகம்
3. சமூகநாடகம்
4. பாடசாலைநாடகம்

(40 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாவது வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01) சுருக்கமான விடை தருக

1. புதிதளித்தல் என்றால் என்ன?
2. சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது எனக் கூறியவர் யார்?
3. ஊமத்துடன் தொடர்புடைய அரங்க விளையாட்டு எது?
4. “வேளாண்மை செழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆடப்படும் நாட்டார் கலை வடிவம் எது?
5. திருப்பாடுகளின் காட்சியை வருடாவருடம் மேடையேற்றும் நிறுவனம் எது?
6. படைப்பாக்க அசைவிற்கு உதாரணம் ஒன்று தருக?
7. தொழில்நுட்ப கலைவடிவம் ஒன்று தருக?
8. தமிழரின் பாரம்பரிய நாடக வடிவம் எது?
9. மனித உடலில் குரல் தோன்றும் இடங்கள் யாவை?
10. சிறுவர் நாடகங்கள் இரண்டின் பெயர் தருக?

(12 புள்ளிகள்)

(02)
1. நாடகம் என்றால் என்ன?
2. நாடக மூலக்கூறுகள் யாவை?
3. நாடகமொன்றின் சிறப்பியல்புகள் 6 தருக?

(3 +3 + 6 = 12 புள்ளிகள்)

(03)
1. நாடகத்துடன் தொடர்புடைய நான்கு கலைகளைக் குறிப்பிடுக?
2. மேடை நாடகமானது இசை. இலக்கியம் ஆகிய கலைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக.

( 4+ 8 = 12 புள்ளிகள்)



kalvi.lk

(04) 1. அரங்க விளையாட்டுக்கள் என்றால் என்ன?

2. உமக்குத் தெரிந்த அரங்க விளையாட்டுக்கள் நான்கைக் குறிப்பிடுக.

3. மேலே நீர் கூறிய 2 விளையாட்டை குறிப்பிட்டு விளையாடப்படும் முறையை எழுதுக. (2+ 4 + 6 = 12 புள்ளிகள்)

(05) 1. நாடகப் பண்புடைய சடங்குகள் 4 தருக?

2. மேலே நீர் குறிப்பிட்ட சடங்கு இரண்டின் ஆற்றுகை முறைகளை குறிப்பிடுக?

3. மேலே நீர் குறிப்பிட்ட சடங்கு இரண்டின் நாடகப் பண்புகளை எழுதுக.

(4 + 4 + 4 = 12 புள்ளிகள்)

(06) 1. நாடக எழுத்து ஒன்றில் காணப்படும் மூலக் கூறுகள் யாவை?

2. கதை ஒன்றினை நாடகமாக்கும் போது கையாளும் நுட்ப முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

3. போதைப்பொருள் விழிப்புணர்வு நாடக எழுத்துருவை எழுதுக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(07) சிறு குறிப்பு மூன்றிற்கு எழுதுக.

1. அரங்கப்பயிற்சி
2. அசைவுகள்
3. கலை
4. பறைமேளக்கூத்து

(3 x 3 = 12 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page